மாண்புமிகு திரு. துரைமுருகன்: என்னது, யார்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னாலேயிருந்துகொண்டு யாரும் comment அடிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எல்லாவிதமான முறைப்படி, அரசு எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பேசுகிறவர்கள் யாராக இருந்தாலும் தைரியமாகப் பேசலாம், நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். ஆனால், உங்களைவிட பின்னாலேயிருந்து பேசி செய்ததிலே எல்லாம் நான் இந்த அவையிலே Doctorate வாங்கியவன் இப்போது பொறுப்பிலே இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர்களை முதலில் அவரவர்கள் சீட்டிலே போய் உட்காரச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அதை நான் கட்டுப்படுத்துகிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் அவையிலே ஒழுங்காக இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அப்போது பின்னாலேயிருந்து comment அடித்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பின்னாலேயிருந்து comment அடிக்கிறார்கள். உறுப்பினர்களை அவரவர்கள் சீட்டிலே போய் உட்காரச் சொல்லுங்கள், முதலிலே. (குறுக்கீடுகள்)

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) இன்று எடுத்துக்கொள்ளப்படவிருந்த உறுப்பினர்களின் மூன்று அறிவிப்புகளை நாளை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரை நகரில் இயக்கப்படும் அரசுப் போக்குவரத்துக் கழகத் தாழ்தள பேருந்துகளில், திருச்சி, விருதுநகரில் உள்ள கட்டணத்தைவிட அதிகமாக வசூலிப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். நன்மாறன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி

2008 நவம்பர் 11] [பேரவைத் தலைவர்]

சார்பாகவும், திரு. சி. ஞானசேகரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாகவும், திரு. தி. வேல்முருகன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும் விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் 'தகவல் கோரல்' என்ற முறையில் நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். அதேபோல், தமிழகத்தில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்தும், வால்பாறை மற்றும் செங்கல்பட்டு தொகுதிகளில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் கொடுத்துள்ள கவன ஈர்ப்புகளும் நாளை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.